தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 6-2-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## சுயவேலைவாய்ப்புக்கு ஊக்கமளிக்கும் வேளாண் தொழில்நுட்பம்

**சுயதொழில் வளர்ச்சிக்கு**

**அரியவாய்ப்பு**

இல்லமாக இருந்தாலும் சரி, வேளாண் பண்ணைகளாக இருப்பினும் சரி, வியாபாரிகளின் கிடங்குகள் ஆயினும் சரி **"தானியசேமிப்பு"** அவசியமாகிறது. அவ்வாறு சேமிக்கும் சமயம் தானியங்களிலிருந்து பூச்சிகள் உற்பத்தியாகி சேதம் உண்டாக்குவது அனைவரும் அறிந்ததே. பொதுவாக சேமிப்பு தானியங்களில் பயன்படுத்தப்படும் 'செல்பாஸ்' புகை மூட்டம் **பூச்சிகளின் முட்டைகளை** அழிப்பதில்லை. இக்காரணத்தால் தான் தானியங்களை சேமிக்கும் சமயம் பூச்சிகளின் முட்டைகளிலிருந்து புழுக்கள் உண்டாகி அவை கூட்டுப்புழுவாகி பின்னர் வண்டுகளாக வெளிவருகின்றன. எனவே, சேமிக்கும் சமயம் பூச்சிகள் தோன்றாமல் இருக்க **முட்டைகளை அழிப்பது** இன்றியமையாத செயலாகும். வேறு வழியில்லை. இதற்காகத் தான் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் **"சேமிப்பு தானியங்களில் ஏற்படும் பூச்சிகளின் முட்டைகளை அழிப்பதற்கு ஓர் கருவியை கண்டுபிடித்துள்ளது".**

கருவி:

**Hand Operated**

**Cleaning efficacy: 50 Kg/ hr**




**Approximate Unit Cost – Rs. 40,000.00**

**Power Operated**

**Cleaning efficacy: 200 Kg/ hr**



**Approximate Unit Cost – Rs. 1,75,000.00**

சுய தொழில்:

இன்றைய காலங்களில் ‘சுயதொழில்’ வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. சுய தொழில் ஆரம்பிக்க பல சலுகைகளை (Loans) அரசாங்கம் முன்நின்று செய்து வருகிறது. இக்கண்டுபிடிப்பு இத்தகைய சுயதொழில் வாய்ப்புக்கு ஓர் சிறந்த உபகரணம். சேமிப்பு தானியங்களில் பூச்சிகள் வராமல் பாதுகாக்க வேறு எந்த வழியும் இல்லை. ஏனெனில், முன்னர் கூறியது போல் பூச்சிகளின் முட்டைகள் தற்சமயம் பயன்படுத்தப்படும் செல்பாஸ் புகை மூட்டம் முறையாக அழிக்க முடியாது.

எனவே சுயதொழில் செய்ய முனைவோர் ‘இக்கருவி’ ஒன்றை அரசாங்க சுயதொழில் திட்டங்களின் மூலம் பெற்று அதை நிறுவி மக்களுக்கு சேமிக்கப்படும் தானியங்களில் பூச்சிகள் வராமல் இருக்க உதவலாம். ஒரு கிலோ தானியத்தை சுத்தம் செய்ய (பூச்சிகளிலிருந்து) வியாபாரத்திற்கு ஏதுவாக சில ரூபாய்களை கட்டணமாக வைத்துப் பயன்பெறலாம்.

மேலும் விபரங்களுக்கு www.mohantrap.com என்ற வளைதளத்தைப் பார்க்கவும்.

மக்கள் தொடர்பு அலுவலர்